பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 21 திங்கட்கிழமை ( 06-11-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 322

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
ஏ. எஸ். ஆறுமுகம்
பல்பொருள்வாணிபம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(9985)

## ★ நோர்வேயின் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தாலும்
# குடாநாட்டுயுத்தத்தில் மாற்றமில்லை
# யுத்தம் மேலும் தீவிரப்படுத்தப்படும்!

## இராணுவத் தலைமைப்பீடம் அறிவிப்பு!

(கொழும்பிலிருந்து விஷேட நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப்பேச்சு வார்த்தைகளில் நோர்வே அரசு ஈடுபட்டுவந்தாலும் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தப்படமாட்டாது. மாறாக யுத்தம் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

வடபகுதி யுத்தமுனையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் படை அதிகாரிகளுக்கும் இராணுவத் தலைமையகம் மேற்கண்டவாறு அறிவித்தல்களை வழங்கியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் முயற்சிகளில் நோர்வே அரசு தீவிரமாக ஈடுபட்டு வந்தாலும், புலிகளுக் கெதிராக முன்னெடுத்துச் செல்லப்படும் யுத்தத்தில் எந்தவிதமான மாற்றத்தையோ, தாக்கத்தையோ ஏற்படுத்த மாட்டாது என்று இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(8 ஆம்பக்கம் பார்க்க)

### அமைச்சரவைக் கூட்டம் இன்று
## பிரபாகரன் - எரிக்சோல் சந்திப்பு
## ஜனாதிபதி விளக்கமளிப்பார்

(கொழும்பு)

அமைச்சரவையின்! அவசர கூட்டமொன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையில் இன்று காலை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இலங்கையின இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரனுக்கும், நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்

(8-ம்பக்கம் பார்க்க.)

## புலிகளுக்கு எதிரான யுத்தத்தை சகல மக்களும் ஆதரிக்க வேண்டும்
### இராணுவத் தளபதி பேட்டி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் நடாத்தும் போரை இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் ஆதரிக்கவேண்டும், என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது

வடக்கு கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நட

(8-ம்பக்கம் பார்க்க.)

## டிசம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி இந்தியா செல்வார்!

[கொழும்பு]

நோர்வேயின் சமாதான முயற்சிகளையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அடுத்த மாத முற்பகுயில் இந்தியா செல்வாரெனநம்பத் தகுந்த வட்டாரங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

இந்தியாவிற்குச் செல்லும் ஜனாதிபதி அங்கு பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக விவாதிப்பதுடன், நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்தும் விளக்கிக் கூறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

### நோர்வேயின் தூதுவர் ஊடாக
## அரசியல் சீர்திருத்த யோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்படும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் மத்தியஸ்தம் வகித்து வரும் நோர்வேயின் தூதுவர் அரசியல் சீர்திருத்த யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க அரசு தரப்பு தீர்மானித்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு குறித்து புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும், ஜனாதிபதியுடனும் பேச்சுக்கள் நடாத்தி தற்போது நோர்வே திரும்பியுள்ள விஷேட பிரதிநிதி அடுத்த தடவை வன்னி செல்லும் போது, அரசியல்

(8ம் பக்கம் பார்க்க)

## வெள்ளைவானில்வந்தகுழு 3 இளைஞரைக்கடத்தியது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் வெள்ளைவானில் வந்தோரால் மூன்று இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

அம்பனைச்சேர்ந்த இ. சுகந்தன் (வயது23) ம. சுதன் (வயது 25) த. கருணா (வயது 30) ஆகியோர் நள்ளிரவுவேளையில் வெள்ளை

(8ஆம்பக்கம்பார்க்க)

### லண்டன் கலைவிழா மோதலில்
## 4 தமிழ் இளைஞர் காயம்!

(லண்டன்)

லண்டனில் தீபாவளித் தினத்தன்று இடம்பெற்ற கலைவிழா ஒன்றின்போது ஈழத்தமிழர் மத்தியில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் 4 தமிழ் இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8ஆம் பக்கம்பார்க்க)

## கொழும்பை பாதுகாக்க விஷேட பொலிஸ் சேவை

[கொழும்பு]

கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு நிலைகளை மேலும் பலப்படுத்துவதற்கு, திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு. சந்தேக நபர்களைக் கைதுசெய்யும்விஷேட திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட பிர

(8ம் பக்கம் பார்க்க)

## 11 சடலங்கள் அடையாளம் காணவில்லை

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்ப முகாமில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில், அடையாளம் காணமுடியாத 11 பேரின் சடலங்கள் தொடர்ந்தும் கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சடலங்

[ 8 ஆம் பக்கம் பார்க்க

### 11-வது பாராளுமன்றத்தின்
## முதலாவது அமர்வு 9ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதிசந்திரிகா கலந்து கொள்ளும் இக் கூட்டத் தொடரில் புதிய அரசின் முக்கிய கொள்கை விளக்கங்களும் வெளியிடப்படவுள்

(8ம் பக்கம் பார்க்க)

## 2 கரும்புலிகள் உயிரிழப்பு

[வவுனியா]

திருமலைக்கடலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கரும்புலித் தாக்குதலில் 2 கடற்கரும்புலிகள் உயிரிழந்துள்ளனர் அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

● லெப். கேணல் நரேஸ் (முருகேசு பிரேம்குமார்

(8-ம்பக்கம் பார்க்க.)

## பயணிகள் கப்பல் நாளை புறப்படும்

[யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருமலைக்கான "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் சேவை நாளை செவ்வாய்க் கிழமை இடம் பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண ஆயத்தங்களு

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

## அலுவலக உதவியாளர்கள் (பெண்கள்)

G.C.E O'L படித்தவர்க , தமிழ். ஓரளவு ஆங்கில அறிவு, நிர்வாகத் திறமை உ ளவர்கள் நற்சான்று, கல்வித் தகைமைகளுடன் நேரில் விண்ணப்பத்துடன் சமுகமளிக்கவும்: தினமும் காலை 11,00 மணி முதல் 2.00 மணி வரை சமுகம் தரவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;- ஜெசித்தாரா, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குழி.

(கி / 993)


# இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் நோர்வே முயற்சிகள் தொடர வேண்டும்

## யாழ். மனிதநேய அமைப்பு கூட்டத்தில் தீர்மானம்

[தென்மராட்சி]

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வுகள் காண்கின்ற முயற்சியில் நோர்வே பிரதிநிதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் தொடரப்படவேண்டும். இது விடயத்தில் எவ்வகையான எதிர்ப்புகள் தோற்றம் பெற்றாலும்கூட அவை எதிர்கொள்ளப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படல்வேண்டும். இம்முயற்சிக்கு ஜனாதிபதி, அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ்ப்பிரதேசத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதுணையாக இருந்து தமது விசுவாசமான உண்மையான பங்களிப்பைச் செலுத்தவேண்டும்.

இவ்வாறு நீண்டகால இடைவெளியின் பின்னர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியக்கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஒன்றியத்தின் செயலாளர் அ. கி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ். கத்தோலிக்கமறை மாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவைச் சேர்ந்த வண. பிதா ஏ. ஜ. பேனாட்,கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் வண.பிதா. சீ.ஜீ.ஜெயக்குமார்,இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் உபசெயலாளர் அ. பஞ்சலிங்கம், யாழ்.மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி சறோஜா சிவச்சந்திரன் உட்பட பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த அ.கி.சிவசுப்பிரமணியம் தனது தலைமையுரையின் போதுயாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று பல் வேறுவிதமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்து வருகின்றனர். இங்கு இடம்பெறுகின்ற அநீதிகள், மனித உரிமை மீறல்கள போன்றவற்றினை நாம் வெளியுலகிற்கு எடுத்துக் கூறவேண்டும். இந்தப்பணியை முன்னெடுத்துச் செல்ல மக்கள் தாமாக முன்வரல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் நேற்றைய கூட்டத்தில் தற்போது நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானமுயற்சிகளை அர்த்தம் கொண்டவைகளாக்கும் படி ஜனாதிபதி, அரசியல் கட்சிகள்,மற்றும் தமிழ்ப் பிரதேசத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனித் தனிக் கடிதங்களை அனுப்புவதெனவும்.

ஜனாதிபதி, அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ்ப் பிரதேசத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் கடிதங்களின் பிரதிகளை இணைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அனுப்புவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற படுகொலையையும், பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையையும், வன்மையாகக் கண்டிப்பதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான அநாகரிகமான சம்பவங்கள் இடம்பெறமால் அரசு பார்த்துக் கொள்ளவேண்டும் எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏனைய புனர்வாழ்வு நிலையங்களில் தற்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை அவர்களின் பாதுகாப்பைக் கருதி உடனடியாக தமிழ்ப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யவேண்டும் எனவும் பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலை பற்றி விசாரணையை மேற்கொள்வதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. (க-77)


## பாலர் பாடசாலை

(புலோலி)

வல்வெட்டித்துறை நகரசபைப பகுதியில் மாதிரிப் பாலர்பாடசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம் மேற்கொண்டுள்ளார். (உ-52)


## திருட்டு

(இணுவில்)

உரும்பிராய் வடக்குப் பகுதியில் கடந்த 3ஆம்திகதி நள்ளிரவு வேளையில் வீடொன்றினுள் நுழைந்த திருடர் கோஷ்டி, அங்கிருந்து பெறுமதி வாய்ந்த உடைகள் மற்றும்பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் இதே பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் உண்டியலை உடைத்து பணத்தைச் சூறையாடிச் சென்றுள்ளனர். (செ-49)

## மின்னல் தாக்கி பெண் பலி

(கொழும்பு)

பேராதனைப் பொலிஸ் பிரதேசத்தைச்சேர்ந்த பெண்ணொருவர் மின்னல் தாக்கி உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன் பெய்த கடும் மழையின் போதே மின்னல் தாக்கியதாக பேராதனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் உயிரிழந்தவர் தேயிலைத் தோட்ட 40 வயதுடைய தொழிலாளியாவார். (க-5)

## ஜி. ரி. சற் இன் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்திட்டப் பயனாளிகளாக இருந்தவர்களுக்காக ஜி. ரி. சற் நிறுவனம் நடத்தும் பயிற்சிப் பட்டறை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு கரணவாயில் அமைந்துள்ள ''கமக்காரர் இளைப்பாற்று மண்டபத்தில்'' நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் வீட்டுத் திட்டக் குழுத்தலைவர்களையும், பயிற்சித் தொண்டர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி கேட்டுக் கொண்டுள்ளார். (செ)


## ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப் பொதிகள்

பிற்பகல் 12-00 முதல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ- எகட்டனின்
ஜெசித்தாரா

சுண்டுக்குழி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குழி.

(கி-992)


## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் -03 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப் படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 153406 ஏ | 153406 பி |
| 163981 ஏ | 164089 ஏ |
| 164089 பி | 164135 ஏ |
| 164135 பி | 165471 ஏ |
| 165471 பி | 165471 சி |
| 165471 டி | 165471 ஈ |
| 165688 ஏ | 165688 பி |
| 165688 சி | 165688 டி |
| 166454 ஏ | 166504 ஏ |
| 166656 ஏ | 166781 ஏ |
| 168948 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 144694 ஏ | 144694 பி |
| 144694 சி | 144694 டி |
| 144694 ஈ | 144694 எவ் |
| 144694 ஜி | 159002 ஏ |
| 163385 ஏ | 163385 பி |
| 163385 சி | 163385 டி |
| 163390 ஏ | 163390 பி |
| 163390 சி | 166107 ஏ |
| 166123 ஏ | 166123 பி |
| 166124 ஏ | 166129 பி |
| 166124 சி | 166129 டி |
| 166129 ஈ | 166277 ஏ |
| 166277 பி | 166286 ஏ |
| 166286 பி | 166286 சி |
| 166286 டி | 166340 ஏ |
| 166345 ஏ | 166368 ஏ |
| 166368 பி | 166376 ஏ |
| 166376 பி | 166419 ஏ |
| 166419 பி | 168456 ஏ |
| 168456 பி | 168456 சி |
| 168501 ஏ | 168506 ஏ |
| 168639 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 154202 ஏ | 154202 பி |
| 154981 ஏ | 161197 ஏ |
| 163548 ஏ | 163579 ஏ |
| 163579 பி | 163579 சி |
| 163606 ஏ | 163606 பி |
| 165961 ஏ | 165961 பி |
| 165961 சி | 166064 ஏ |
| 166224 ஏ | 166226 ஏ |
| 166226 பி | 166365 ஏ |
| 168442 ஏ | 168704 ஏ |
| 152115 ஏ | 152115 பி |
| 161665 ஏ | 161665 பி |
| 161665 சி | 161665 டி |
| 164067 ஏ | 165544 ஏ |
| 165818 ஏ | 165818 பி |
| 165818 சி | 165818 டி |
| 166487 ஏ | 166487 பி |
| 166487 சி | 166633 ஏ |
| 166633 பி | 166633 சி |
| 166633 டி | 169007 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 157893 ஏ | 157893 பி |
| 157893 சி | 157893 டி |
| 157893 ஈ | 161677 ஏ |
| 161677 பி | 161677 சி |
| 161816 ஏ | 164101 ஏ |
| 164169 ஏ | 165616 ஏ |
| 165697 ஏ | 165697 பி |
| 165697 சி | 165697 டி |
| 165929 ஏ | 165929 பி |
| 166490 ஏ | 166490 பி |
| 166491 ஏ | 166491 பி |
| 166491 சி | 166505 ஏ |
| 166506 ஏ | 166506 பி |
| 166506 சி | 166527 ஏ |
| 166677 ஏ | 166677 பி |
| 166679 ஏ | 166718 ஏ |
| 166812 ஏ | 166812 பி |
| 166812 சி | 166816 ஏ |
| 168950 ஏ | 168950 பி |
| 168950 சி | 169121 ஏ |
| 169372 ஏ | 169416 ஏ |
| 169416 பி | 169416 சி |
| 169416 டி | |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 164285 ஏ | 164285 பி |
| 164285 சி | 166795 ஏ |
| 166797 ஏ | 168954 ஏ |
| 168955 ஏ | 169338 ஏ |
| 169338 பி | 169338 சி |
| 169338 டி | 169339 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 141746 ஏ | 161633 ஏ |
| 161943 ஏ | 161943 பி |
| 163936 ஏ | 163936 பி |
| 164317 ஏ | 164317 பி |
| 164317 சி | 165521 ஏ |
| 165750 ஏ | 166751 ஏ |
| 166752 ஏ | 166752 பி |
| 166752 சி | 169004 ஏ |
| 169324 ஏ | |

நவம்பர் மாதம் 05-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 155134 ஏ | 155134 பி |
| 155359 ஏ | 155359 பி |
| 163907 ஏ | 164193 ஏ |
| 165507 ஏ | 165507 பி |
| 165581 ஏ | 165581 பி |
| 165581 சி | 165597 ஏ |
| 165637 ஏ | 165637 பி |
| 165637 சி | 165637 டி |
| 166481 ஏ | 166521 ஏ |
| 166551 ஏ | 166551 பி |
| 166551 சி | 166551 டி |
| 166601 ஏ | 166601 பி |
| 166808 ஏ | 166808 பி |
| 166808 சி | 166834 ஏ |
| 166834 பி | 166856 ஏ |
| 166856 பி | 166915 ஏ |
| 166915 பி | 166918 ஏ |
| 168926 ஏ | 168926 பி |
| 168926 சி | 168940 ஏ |
| 168940 பி | 168940 சி |
| 168949 ஏ | 168949 பி |
| 168992 ஏ | 169356 ஏ |
| 169356 பி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 156993 ஏ | 156993 பி |
| 157127 ஏ | 157141 ஏ |
| 152983 ஏ | 159252 ஏ |
| 159252 பி | 159252 சி |
| 159252 டி | 159402 ஏ |
| 159402 பி | 161038 ஏ |
| 161038 பி | 161038 சி |
| 161219 ஏ | 163242 ஏ |
| 163374 ஏ | 163364 பி |
| 163374 சி | 163584 ஏ |
| 166052 ஏ | 166430 ஏ |
| 166430 பி | 166430 சி |
| 168439 ஏ | 168473 ஏ |
| 18498 ஏ | 1668499 ஏ |
| 168499 பி | 168542 ஏ |
| 168552 ஏ | 168580 ஏ |
| 168580 பி | 168637எவ் |
| 168675 ஏ | 168675 பி |
| 168675 சி | 168675 டி |
| 168675 ஈ | 168675 எவ் |
| 168724 ஏ | 168783 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 145490 ஏ | 145490 பி |
| 157140 ஏ | 157290 ஏ |
| 157290 பி | 157290 சி |
| 162717 ஏ | 162737 ஏ |
| 162760 ஏ | 162760 பி |
| 162760 சி | 162760 டி |
| 2760 ஈ | 162934 ஏ11 |
| 662934 பி | 162934 சி |
| 162934 டி | 162960 ஏ |
| 162960 பி | 162960 சி |
| 16260 டி | 162960 ஈ |
| 162969 ஏ | 162969 பி |
| 163036 ஏ | 163036பி |
| 163639 ஏ | 163939 பி |
| 163639 சி | 163639 டி |
| 163639 ஈ | 163695 ஏ |
| 163695 பி | |

## சிலை அமைக்க ஆட்சேபமில்லை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கணவர் விஜயகுமாரதுங்காவின் சிலை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது இதில் எமக்கு ஆட்சேபமில்லை.

ஆனால் இதே போன்று தியாகி சிவகுமாரனின் சிலையை நிறுவ அரசாங்கம் ஏன் அனுமதி வழங்கவில்லை என்றும், இதுபோன்ற நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் மனக்கசப்பை ஏற்படுத்துமென்றும் புளொட் அமைப்பின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## புதிய ஆய்வுகூடமும் நூலகமும்

(கரணவாய்)

இமையாணன் அ. த. க. வித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி, கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய ஆய்வுக் கூடத்தொகுதியும், நூல் நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றது. (செ2-7)

## சமூகத்தை...

வாழ்க்கையையும் சமூகத்தின் வாழ்வையும் வளமாகஅமைக்கலாம்.

சிறந்த கல்விமானாக நேர்மைக்கும் நியாத்திற்கும் கட்டுப்பட்டவனாக பிறரின் நம்பிக்கைக் குரியவனாக தவறுகளின்றும் விலக்கப்பட்டவனாக ஒருவன் உருவாகும் போது மக்களின் மதிப்பையும் பாராட்டையும் பெறுவதோடு தன்னைப் பற்றித் தானே பெருமைப்படுகிறான் அவனின் வாழ்க்கை வளம் பெற்று மலர்ச்சி அடைவதோடு உயர்ந்தும் விடுகிறது.

சூழ் நிலையை மனிதனே உருவாக்குகின்றான்சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தங்கள் இலட்சியப் பயணத்தைக் தொடரும் திறமை எல்லோருக்கும் உண்டாவதில்லை. உலக நியதிகளும் தர்மங்களும் மீறப்படும் போது புறக்கணிக்கப்படும் போதும்அவற்றிற்கேற்ற பலன்களையே கொண்டு வருகின்றன. தானத்திலேயே சிறந்தது நிதானம்இது இல்லாதபோது எவ்வளவு உழைத்து உயர்ந்தாலும் நாம் மனிதனாக மதிக்கப்படமாட்டோம்.

நாம் அவனியில் எவற்றை விதைக்கின்றோமோ அவற்றையே அறுவடை செய்கின்றோம். (க)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கணிதம் -பகுதி-1

நேரம்:- 1 மணி

ஆக்கம்:- யாழ். சி. டி. பல்குணன்லாலா
மல்லாகம் மகா வித்தியாலயம்


**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) இரண்டு பேனாக்களினதும், மூன்று கொப்பிகளினதும் விலை ரூபா 52, ஐந்து பேனாக்களினதும், நான்கு கொப்பிகளினதும் விலை ரூபா 88
அ) ஏழு பேனாக்களினதும், ஏழு கொப்பிகளினதும் விலை யாது?
ஆ) ஒரு பேனாவினதும், ஒரு கொப்பியினதும் விலை யாது?

02) முக்கோணமொன்றின் இரண்டாவது கோணம் முதலாவது கோணத்திலும் 30 பாகை அதிகமாயும், மூன்றாவது கோணம் முதலாவது கோணத்தின் இரண்டு மடங்கிலும் 50பாகை அதிகமாயும் இருந்தால்
அ) முக்கோணத்தின் மிகப்பெரிய கோணத்தின் அளவு யாது?
ஆ) கோணத்தினளவின் அடிப்படையில் இது எவ்வகையான முக்கோணியாகும்?

03) அ) 4, 6, 10 இன் பொ. ம. சி யாது?
ஆ) 4, 6, 10 என்பவற்றால் வகுக்கும்போது மீதியாக முறையே 1, 3, 7 என்பவற்றைத் தரக்கூடிய மிகச் சிறிய எண் எது?

04) xy || mn, $\hat{xyz} = 110$ பாகை
$\hat{mnz} = 120$ பாகை எனின்
$\hat{yzn}$ இன் அளவு யாது?





05) ஒரு தெருவில் உள்ள வீடுகளில்குடியிருப்போர் வளர்க்கும் கோழிகளின் எண்ணிக்கை பின்வருமாறு
12, 10, 13, 6, 7, 7 8, 14
அ) ஆகாரம் யாது?
ஆ) இடையம் யாது?

06) 812 mm, 0. 9 m, 27 cm என்பவற்றை ஏறுவரிசையில் தருக.

07) ஒரு சாடியும், சாடிநிரம்பவுள்ள நெய்யும் சேர்ந்து x kg நிறையுடையது. வெற்றுச் சாடியின் நிறை y kg
அ) சாடி நிரம்பவிருந்த நெய்யின் நிறை யாது?
ஆ) அந் நெய்யினை 9 பேர் சமனாகப் பங்கிட்டால் ஒருவர் பெறும் நெய்யின் நிறை என்ன?

08) $y = 3x + c$ என்னும் நேர்கோடு (1, 1), (3, t) ஆகிய புள்ளிகளினூடாகச் சென்றால்
அ) c இன் பெறுமானம் யாது?
ஆ) t இன் பெறுமானம் யாது?

09) சதுரம் ABCD இல் AB = 12 cm
Ax = Cz = 1 Bm, Py = 3 cm
எனின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க




10) மட 2 = X, மட 3 = Y, மட 5 = Z எனின் மட 30 ஐ X, Y, Z இல் காண்க?

11) $\frac{C}{V-C} = \frac{7}{3}$ எனின் $\frac{V}{C}$ இன் பெறுமதி காண்க?

12) தையல் இயந்திரமொன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கிய ஒருவர் முதலில் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்திய பின்னர் மீதிப் பணத்தை 17 சம மாதத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தினால் மாத அலகுகளின் எண்ணிக்கையைக் காண்க?

13) பரீட்சையொன்றில் லதா 75 புள்ளிகளில் 30 புள்ளிகளைப் பெற்றாள் எனின் அவள் பெற்ற நூற்று வீதப் புள்ளி யாது?


14) சவர அலகுத் தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு 1000 அலகுகளிலும் 10 அலகுகள் கூர் மழுங்கியிருப்பது பரிசீலனையிலிருந்து அறியப்பட்டது. அவற்றிலிந்து எழுமாற்றாக எடுக்கப்படும் ஒரு சவர அலகு கூரானதாக விருப்பதற்கான நிகழ்தகவு யாது?

15) தீர்க்க : $C^3 - 49C = 0$

16) சுருக்குக : $\frac{0.074}{0.037} \quad \frac{0.2}{5}$

17) சுருக்குக; $4\frac{1}{3} + 2\frac{1}{6} - 1\frac{1}{9}$

18) வென் படத்தில் 2, 4 ஆகிய பிரதேசங்கள் நிழற்றப்பட்டிருந்தால் நிழற்றப்பட்ட பகுதியை தொடைக் குறியீட்டில் தருக?




19) F = 1.8C+32பாகை என்பது செல்சியஸ் (C) பாகையை பரனைற்று (F) பாகையாக மாற்றப் பயன்படுத்தபடுகிறது எந்த வெப்ப நிலையில் இரண்டு அளவுத்திட்டங்களிலும்வெப்ப நிலையானது ஒரே எண் பெறுமானத்தைக்கொண்டிருக்கும்?

20) இணைகர மொன்றின் மூலைவிட்டங்கள் தொடர்பான இரு பண்புகளைத் தருக?

[நாளை தொடரும்)

# மிதிவெடியில் சிக்கியவர் இடதுகாலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் சிக்கியஇளைஞர் ஒருவர் முழங்காலுக்கு கீழ் தனது இடதுகாலை இழந்துள்ளார்.

கார்த்திகேசு சிவறஞ்சன் (வயது 34) ஏழாலையைச் சேர்ந்தவரே மிதிவெடியில் சிக்கியரவர்.

ஏழாலைப்பகுதியில் நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த தோட்டநிலத்தை சீர் திருத்திக் கொண்டிருந்த போதே இவ் விபரீதம் நிகழ்ந்துள்ளது. (க-12)

# வீதி ஒழுங்கு பேணாது சைக்கிள் சவாரி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண நகரவீதிகளில் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்பவர்கள் வீதி ஒழுங்கு முறைகளைப்பற்றிக் கவனியாது தம்மிஷ்டம் போல பயணம் செய்து வருவதால் பொதுமக்களும் ஏனைய வாகனங்களை ஓட்டுபவர்களும் பல்வேறு சிரமங்களை தினசரி எதிர்நோக்கி வருகின்றனர்.

துவிச்சக்கரவண்டிகளில் பயணம்செய்யும் மாணவர்கள் ஒரேவேளையில் நான்கு ஐந்து பேராகச் செல்வதால் பஸ்வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார்கார் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் பல தொல்லைகளைச் சந்தித்து வருவதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, யாழ்ப்பாண நகரத்து வீதிகளில் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகரிக்கும் நேரங்களில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உருவாகின்றன எனத் தெரியப்படுகின்றது.

மேலும் நகரவீதிகளில் சனசந்தடிமிக்க நேரங்களில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# மாணவரின் விஞ்ஞான அறிவை வளர்க்க போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கம் இப்பகுதி மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் முகமாக விஞ்ஞான வினா-விடைப் போட்டி, விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி, கண்காட்சிப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்த முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக வினா, விடைப்போட்டிக்குரிய எழுத்துப் பரீட்சையும், கட்டுரைப்போட்டியும் 18ம் திகதி (சனிக்கிழமை) யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

வினா விடைப் போட்டி மு.ப 10.30-11.30 வரையும், கட்டுரைப்போட்டி மு.ப 11.45-12.45 (புதியநேரம்) வரையும் நடைபெறும்.

40க்கும் மேலான பாடசாலைகள் இதில் பங்கு பற்ற முன்வந்துள்ளன பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலைக்குஅருகாமையிலுள்ள பரீட்சை மண்டபத்தில் தோற்றலாம். மேலும் சேர விரும்பிய கல்லூரிகள் யாழ். விஞ்ஞானச் சங்கம் (யாழ். பல்கலைக்கழகம்) தலைவர் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளலாம். சாவகச்சேரி பாடசாலை மாணவர் பரீட்சை மண்டபம் எதிலும் தோற்றஅனுமதிக்கப்படுவர்.

வினா விடைப்போட்டியின் இறுதிப் போட்டி, விஞ்ஞானப்பேச்சுப்போட்டி, மற்றும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி ஆகியன ஜனவரி 11, 12, 13ம் திகதி 2001ல் யாழ்இந்துக்கல்லூரியில்நடைபெறவிருக்கிறது. விஞ்ஞானக்கண்காட்சிப் போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்கள் காட்சிப் பொருட்களை திட்டமிட்டுத் தயாரிப்பதற்கான தருணம் இது.

மாணவர்கள் தயாரிக்கும் கண்காட்சிப் பொருட்கள் விடயமாக, பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 30ம் திகதி மு.ப 10.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர்கள் இதில் பங்கு பற்றுமிடத்து, விஞ்ஞானக் கண்காட்சியினை தற்காலக் கல்விக்குப் பொருத்தமானவாறு நடத்தமுடியும்.

இக்கண்காட்சியில் பாடசாலைகளின்கண்காட்சியுடன் சேர்த்து யாழ். பல்கலைக் கழகத்தின் கல்வியறிவு சார்ந்த காட்சிப் பொருட்களும் இடம் பெறவுள்ளது. மாணவர்களின் ஆர்வத்தினையும், அவர்களது மேம்பாட்டினையும் அதிகரிக்கும் வகையில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், வருடம் தோறும் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகிறது. எனவே ஒவ்வொரு பாடசாலைமாணவர்களும், ஏனைய மாணவர்களும் இதில் கலந்துகொண்டு தமது கல்வித் தகமைகளை வளர்க்க ஆசிரியர், அதிபர், கல்விஅதிகாரிகள், பல்கலைக் கழக அதிகாரிகள் தமது ஒத்துழைப்பை வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# விளக்கில் எரியுண்டு வயோதிபமாது பலி

(யாழ்ப்பாணம்)

விளக்கில் எரியுண்டு வயோதிபமாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணபதிப்பிள்ளை செல்லாச்சி (வயது-85) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் இறந்துள்ளார் பிரேதபரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க 12)

# பால்மா, கொப்பி விநியோகம்

(சங்கானை)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வசித்து வரும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, சர்வோதய நிறுவனத்தினால் பால்மா வழங்கப்பட்டது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டது. (செ-ப-16)

# வன்னிக்கு மருந்து கொண்டு செல்ல 'ரம்மியா ஹவுஸ்' இராணுவம் தடை

## நோயாளர்கள் பெரும் பாதிப்பு

(வவுனியா)

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிபகுதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இரண்டாம் காலாண்டுகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்திருந்த போதும் அம்மருந்து வகைகள் குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படாமல் களஞ்சியத்தில் இருப்பதாக வவுனியா பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திற்கு மருந்துகளை அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்திருந்த போதும் வவுனியாவிலுள்ள 'ரம்மியா ஹவுஸ்' சோதனைச்சாவடியில் இராணுவத்தினர் வன்னிக்கான மருந்துகளை அனுப்புவதற்கு அனுமதிக்கவில்லை என வவுனியா மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் திருமதி டாக்டர் எஸ். யோகநாதன் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ம)

### புலிகள் தரப்பில் பலியானோர்

(வவுனியா)

கடந்த 29ம்திகதிபடையினருடன் ஏற்பட்ட மோதலில் ஐவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோரின் விபரம் வருமாறு;

★ கப்டன் ரூபராஜ் (குருநாதன் – ரகுநாதன் அம்பாறை.

★ 2ம் லெப் அகாந்தி (தர்மலிங்கம் - தீலிபன்) மட்டக்களப்பு.

ஆகிய போராளிகளும், அதே தினத்தன்று கனகம் புளியடியில் இடம் பெற்ற மோதலில்

★ லெப். இறைமகன் (ஆனந்தராசா - ருமீத்திரன்) யாழ்ப்பாணம்.

சிறப்பு எல்லைப்படைவீரர்களான

★ ராஜன் (சாமித்தம்பி - ராஜன்) அம்பாறை

★ மூர்த்தி (மயில்வாகனம் - இலட்சுமணன்) யாழ்ப்பாணம்.

ஆகியோரே பலியாகியவர்களாவர். (ஸ்ரீ-க)

## காணாமல் போனோரின் உறவினர்களுக்குஅழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவத்தால் கைதாகி காணாமல் போனோர் தொடர்பான வழக்கு விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ளதால், சம்பந்தப்பட்ட இளைஞர்களின் உறவினர்களை யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியில் உள்ள மணியம் கட்டடத்தில் இயங்கும் மனித கௌரவத்திற்கான மன்றத்தில் சந்திக்குமாறு அதன் இணைப்பாளர் ஐ சிவராசா கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் செரிவிக்கையில் அருளானந்தம் செல்வக்குமார் அப்புக்குட்டி நாகராசா, சிதம்பரப்பிள்ளை சுகர்சன் ஆகியோர் மீதான ஆட்கொணர்வு மனுவே தாக்கல்செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக 34, 3ம் குறுக்குத்தெரு, புதிய குடியிருப்பு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளானந்தம் திலகவதி, மந்துவில்மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிதம்பரப்பிள்ளை,வயற்கரை மீசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி நாகராசா ஆகியோரை உடன்சந்திக்குமாறு அவர் கேட்டுள்ளார். (க)

## பெண் பிள்ளைகளுடன் பகிடிவிடும் 'பிரகிருதிகள்'

### நெல்லியடியில் அதிகரிப்பாம்

(துன்னாலை)

நெல்லியடி கரவெட்டிப் பகுதிகளில் பாடசாலை மற்றும் தனியார் கல்விநிறுவனங்களிற்குச் செல்லும் பெண்பிள்ளைகள் பெரும் இடைஞ்சல்களிற்கு ஆளாகி வருவதாக பெற்றோர் மத்தியில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதைகளில் பின்தொடர்தல், மற்றும் பகிடி விடுதல் போன்ற தேவையற்ற வகையில் கதைகள் பேசிதொல்லை கொடுத்துவரும் பிரகிருதிகளால், பெண்பிள்ளைகள் வெளியே செல்ல அச்சம் கொண்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதே சமயம், இவ்வாறான சம்பவங்கள் தொடருமானால், சமூகத்தில் பல சீர்கேடுகள் தலைதூக்கலாமென வும் வீணர்களின் செயலைக் கட்டுப்படுத்த வேண்டியது சமூகத்தின்பால் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினரது கடமையெனவும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-41)

## சந்திரசேகரன் எம். பியின் விடுதலைக்கு நடவடிக்கை

### சட்டமா அதிபர் உறுதி

(கொழும்பு)

குற்றத்தடுப்பு புலனாய்வுப் பொலிஸாரினால் கடந்த திங்கள் நள்ளிரவு கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித்தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பி யுமான பெ. சந்திரசேகரனை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் கே. ஸி, சமலசபேசன் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பெ. சந்திரசேகரனின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கிடைத்ததுடன் அவரது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

சந்திரசேகரனின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபருடன் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி வி.பி தேவராஜ் தொடர்பு கொண்டதையடுத்தே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். (வ)

## வாழ்வின் மாற்றங்களை மாணவர் உடன் அறியச் செய்தல்வேண்டும்

(அரியாலை)

''மனித வரலாற்றின் ஓட்டத்தில் அறிவியல் புரட்சியும், கைத்தொழிற் புரட்சியும் ஏற்படுத்திய சமூக பொருளாதார விளைவுகளைத் தொடர்ந்து இன்று ஏற்பட்டு வருகின்ற தகவல் புரட்சியையும், இலத்திரனியல் புரட்சியையும் அவைபொருளாதாரத்திலும், நாகரிகத்திலும் வாழ்வியலிலும், பண்பாட்டிலும் சிந்தனையிலும் ஏற்படுத்திவருகின்றமாறுதல்களைத் தெரிந்து மாணவர்களுக்கு அறியவைத்தல் வேண்டும்,,

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ஜயரத்திரம் நினைவு நாளும், கனிஷ்டபிரிவு பரிசளிப்பு விழாவும் அண்மையில் கல்லூரி அதிபர் பொ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றுகையில்;

அண்மைக்கால கல்விச் சீர்திருத்தங்கள் தகவல் புரட்சியை உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் மாணவர்களும் தாமே இவற்றைத் தேடிக்கற்க வேண்டுமே ஒழிய பிறரை எதிர்பார்க்கக்கூடாது.

எத்தனை இடையூறுகள், துன்பங்கள், தடைகள் இருப்பினும் எமது மண்,கல்வி மீது கொண்ட பற்றுறுதியைக் கைவிட்டுவிடுவதில்லை. அர்ப்பணிப்புகள் மூலம் கல்வியில் சாதனை படைத்த எமது சமூகம் இன்று ஒரு இக்கட்டான நிலையிலுள்ளது. யுத்த சூழல், திட்டமிட்ட சில நடவடிக்கைகள் எம்மைப் பல நூறு வருடங்கள் பின் தள்ளிவைத்துள்ளன.

எமது கல்வியையும் எமது பாரம்பரியத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது இன்றைய எமது தலையாய கடமையாகும் என்று குறிப்பிட்டார். (உ-106)

## மட்டக்களப்புக் ஹர்த்தாலில் 15 வாகனங்கள் சேதம்

(மட்டக்களப்பு)

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை, பண்டாரவளை படுகொலை, மலையகக் கலவரங்கள் என்பவற்றைக் கண்டித்து மட்டக்களப்பில் நடத்தப்பட்ட ஹர்த்தால் நிகழ்வுகளின் போது, 15 வாகனங்கள் அடித்துச் சேதப்பட்டிருக்கிறது.

ஹர்த்தால் தினங்களில் வீதியில் வாகனம் ஓட்டிச் சென்ற போது, வீதி மறிப்பில் ஈடுபட்டிருந்த இளைஞர் குழுக்களே கற்களால் எறிந்தும், பொல்லுகளால் அடித்தும் இவ்வாறு வாகனங்களை சேதப்படுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர். (உ-60)

## புதிய பிரதம தபாலகம் விரைவில் அமைக்கப்படும்

வட்டுக்கோட்டையில் பிரதம தபாலகக் கட்டடம் அமைப்பதற்கென அவ்வூர் இந்துஇளைஞர் மன்றத்தினர் 4 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

நீண்ட காலமாக சொந்தக் கட்டடம் இல்லாது வெவ்வேறு இடங்களிலும் பலத்த சிரமத்தின் மத்தியில் வட்டுக்கோட்டை பிரதம தபாலகம் இயங்கி வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

கட்டட அமைவுக்கென சொந்தமாய் காணி வழங்கப்பட்டதையடுத்து, புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-59)

## ஏறாவூரில் கண்டனப்பேரணி ஆயிரம் பேர் பங்குபற்றினர்

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலையை கண்டித்து ஏறாவூர், மற்றும் கழுவங்கேணியில் நேற்று முன்தினம் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இப் பேரணியில் பொது மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் உட்பட சுமார், ஆயிரம்பேர்வரை கலந்து கொண்டனர்.

இப்பேரணி நண்பகல்12.30 மணியளவில் இடம்பெற்றது.

முடிவில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், மற்றும் ஐ. சி. ஆர். சி, மனிதஉரிமைகள்,ஆணைக்குழு ஆகியவற்றிற்கு மகஜர்களும் அனுப்பி வைக்கப்பட்டன. (க-5)

## கிழக்கிலிருந்து 4 பிரதி அமைச்சர்கள்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நால்வர் முதல்முறையாக பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து சோ. கணேசமூர்த்தி தேசிய நல்லிணக்க இனவிவகார பிரதியமைச்சராகவும், எம்.பி.முகைதீன் அப்துல்காதர் கடற்றொழில் நீரியல் வள பிரதியமைச்சராகவும், அம்பாறைமாவட்டத்தில் இருந்து ஏ.எம்.எஸ். அதாவுட பிரதிக்கல்வியமைச்சராகவும், றஜீத் ஏ. மஜீத் தபால் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் றஜீத் ஏ மஜீத் எம்.பி.தவிர ஏனையோர் மூவரும் முதல் முறையாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது, (உ-60)

## தென்னைச்செய்கைபற்றிய பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து, தென்னை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் தென்னைச் செய்கை பற்றிய கருத்தரங்கும், பயிற்சியும், படக்காட்சியும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெருங்காடு தெற்கு கிராம சேவை அலுவலர் ப. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கை, யாழ். தென்னைஅபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர் சி.சிவச்சந்திரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (செ)

## இராசி பலன்

6-11-2000

(ஐப்பசி 21, திங்கள்) தசமி பி.இ. 3.53 வரை, சதயம் பி.இ. 2.30 வரை ராகுகாலம் 7.35-9.05 சுபநேரம் 12.05-1.35. சித்தம்

**மேடம்**
நண்பர்கள் சந்திப்பு, சந்தோசமான நிலை, தனவரவு, குடும்ப சுகம், காரியஜெயம்.

**இடபம்**
பணியாளர் உதவி, நினைத்த காரியம் கைகூடும், அதிகாரம், அதிகாரிகள் சந்திப்பு.

**மிதுனம்**
கட்டுப்படுதல், வயிற்றுக் கோளாறு, எதிர்பாராத பயம், பிரயாணம்.

**கடகம்**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, காரியத் தடை, நோய்.

**சிங்கம்**
போசன சுகம், தனவரவு, வாகனவசதி, கௌரவம், பிரயாணம்.

**கன்னி**
நோய் குணமடைதல், பகைவர் விலகுவார், சந்தோச மிகுதி, காரிய சித்தி.

**துலாம்**
பிரயாண இடைஞ்சல், குடும்பக் கவலை, சிறுவிபாதி, தாழ்ந்த நிலை.

**விருச்சிகம்**
கல்வியில் சிறப்பு, நம்பிக்கைக்குறை, பயந்த சுபாவம், சுகக்குறைவு.

**தனுசு**
இனிய சம்பவம், பண வசதி, முயற்சி வெற்றி, புதிய பொருள் சேர்க்கை.

**மகரம்**
மதிப்புக் குறைவு, காரியத் தாமதம், பொருள் விரயம், விவாதம்.

**கும்பம்**
தெளிந்த சிந்தை, உடல் ஆரோக்கியம், போசனசுகம், சயன சுகம்.

**மீனம்**
பிரயாணம், நித்திரைக் குறைவு, முயற்சி தாமதம், சுபச் செலவு;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

★ வளவன் ★

### இன்று ஒரு தகவல்

## துணிவு மிக்க சிறுவன்

ஒரு நாடகக் கொட்டகையில் நாடகம் நடந்துகொண்டிருந்தது. மக்கள் நாடகக் காட்சிகளில் மனதைப் பறிகொடுத்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிர்பாராத வகையில் திடுமென்று நாடக மேடையில் ஒரு காட்சி. அதில் நாடகத்திற்குச் சம்பந்தமில்லாத, பாத்திரங்கள் நாடகமேடையில் தோன்றின. அதைத் தொடர்ந்து நாடக மேடையிலும், மக்களிடமும் சலசலப்பு எழுந்தது. விஷயம் இதுதான் - நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்துக் கொண்டிருந்த நடிகர்களில் ஒருவர் எவரிடமோ பணம் கடன் வாங்கியிருந்தார். அது காரணமாக அந்த நடிகரைக் கைது செய்யும் பொருட்டு ஆங்கிலேயப் பொலிஸார் கையில் வாரண்டுடன் நாடக மேடைக்கே சென்று விட்டனர். இந்த விடயம் நாடகம் பார்க்க வந்திருந்த பொது மக்களுக்குத் தெரிய வந்தது. ஆனால், அவர்களனைவரும் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் நிசப்தமாக இருந்தனர்.

அப்போது ஒரு சிறுவனின் குரல் பொலிஸ் காரரை நோக்கி இடி போன்று அங்கே முழங்கியது. ''மேடையை விட்டு வெளியே போ. நடிகரைக்கைதுசெய்யும் உன்வேலையை நாடகம்முடிந்தபிறகு வைத்துக்கொள். நாடகத்தின் இடையில் புகுந்துபொது மக்களைத் தொந்தரவு படுத்தாதே!'' அந்தச் சிறுவனின் குரல் திட்டவட்டமாகவும், பொலிஸாருக்குக் கட்டளை பிறப்பிப்பது போலவுமிருந்தது. அதைக் கேட்டுப் பொலிஸாரே திடுக்கிட்டுவிட்டனர்.

அதற்குச் சிறுவன் கூறியதை ஆமோதித்துப் பொதுமக்களும் ஒருமித்த குரலில் பொலிஸாரை நோக்கி, 'மேடையை விட்டுக் கீழே இறங்கு. நாடகம் முடியும் வரையில் காத்திருந்து நடிகரைக் கைது செய்து கொள்' என்று கூறினர். பொலிஸாரும் அவ்விதமே நடந்து கொள்ளும்படி ஆயிற்று. பொதுமக்கள் சரியான சமயத்தில் குரலெழுப்பிய சிறுவனைப் பாராட்டினார்கள்.

இது நடந்த சமயத்தில் துணிவு மிக்க அந்தச் சிறுவனுக்கு வயது பதினான்கு, பிற்காலத்தில் அந்தச் சிறுவன் வளர்ந்து பெரியவனான போது, அஞ்சாமை என்ற கருத்தை ஆணித்தரமாக இந்திய மக்களுக்குப் போதித்தான். ஆம். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தராக மலர்ந்த நரேந்திரன் தான் அந்தச் சிறுவன்.

நன்றி
தெய்வீகக் கதைகள்

## ஐ. தே. கட்சி கண்டனம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு 35 பேரை பிரதி அமைச்சர்களாக நியமித்திருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தற்போது நியமிக்கப்பட்டிரும் 35 பிரதி அமைச்சர்களை விட மேலும் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள். இது வீணான செலவீனத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடிதுவக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். (வ)

## ஊர்காவற்றுறையில் தலைமைத்துவப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் தலைமைத்துவப்பயிற்சிநெறி இன்று 6ஆம் திகதி தொடக்கம் நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடனேயே இப்பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைக் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்த முப்பது பேருக்கு இப்பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்பவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒருநாளைக்கு எழுபத்தைந்து ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ - 75)

## அசோக ஜெயவர்த்தனா முதலமைச்சராகிறார்!

(கொழும்பு)

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியரசு சப்பிரகமுவ, மேல்மத்திய மாகாணங்களுக்கான முதலமைச்சர்களை நியமிக்கவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுடன், அமைச்சர் டீ. எம். ஜெயரத்தினா நடத்திய பேச்சுக்களின் பின்னரே இவ் நியமனங்களை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி சப்பிரகமுவ மாகாண முதலமைச்சராக மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவும், மேல் மாகாண முதலமைச்சராக றெஜினோல்ட் குரேயும், மற்றும் மத்திய மாகாண முதலமைச்சராக சரத் எக்கநாயக்காவும் நியமனம் செய்யப்படவுள்ளனர். (ஸ்ரீ)

## இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவில் பாகுபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலங்களிலே ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக யாழ். மாநகரசபைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒருசிறு பகுதியினருக்கே. இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோருக்கு வழங்கப்படவில்லை எனவும் யாழ். மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவு தொடர்பாக ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒருகுறிப்பிட்ட தொகை மக்களுக்கே இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவு வழங்கப்படும். ஏனையோருக்கு வழங்கப்படாமல் இருப்பது தொடர்பாக தனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராஜாவுக்கும் கடித மூலம் தெரிவித்துள்ளார். (வ-ஸ்ரீ)

# பண்டாரவளை படுகொலைக்கு வேலணைப் பிரதேசசபை கண்டனம்

(மண்டைதீவு)

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் திட்டமிட்டு மிகவும் கொடூரமான முறையில் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, இதற்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதியுச்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற வேலணை பிரதேசசபை மாதாந்தக்கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மிகவும் குரூரமான முறையில் இடம்பெற்றிருக்கும் இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டித்து எமது முழுமையான எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும் எனவும் மேலும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-83)

## முகமாலையில் தாக்குதல்

தென்மராட்சி முகமாலைப் பகுதியில், விடுதலைப்புலிகளின் நிலைகள்மீது அண்மையில் படையினர் மேற்கொண்ட ஆர். பி. ஜி. தாக்குதலில், புலிகள் தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ

## வீதி சீரில்லை

(கரணவாய்)

உடுப்பிட்டி உப பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இமையாணன் அ. த. க. வித்தியாசாலை வீதி நீண்ட காலமாகத்திருத்தஞ்செய்யப்படாததனால் பொது மக்களும், பாடசாலை, மாணவர்களும் பெரிதுஞ் சிரமமுறுகின்றனர்.

இவ்வீதி திருத்தஞ் செய்யப்படுவதற்குரியபொருட்கள் நீண்ட காலமாக பறிக்கப்பட்டுள்ள போதும் இன்னமும் இவ்வீதி திருத்தப்படவில்லையென பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (செ-27)

## ஊடகவியல் செயலர் நியமனம்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் ஊடகவியல் செயலாளராக பிரபல வானொலி அறிவிப்பாளர் சீலாரத்தின செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் 20 வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றிய இவர் மும்மொழியிலும் புலமையுள்ளவர் என்பதுடன் சிங்கள இனத்தவர்களில் தமிழ் மொழியை மிகவும் ஆழமாகக் கற்றவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## மட்டு.மீனவர்க்கு முதலுதவிப்பெட்டி

[மட்டக்களப்பு]

கடற்றொழில் நீரியல்வள அமைச்சு நலன்புரி பிரிவினரால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இம் முதலுதவிப் பெட்டியில், பெறுமதியான பல மருந்துப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-60]

## தேசிய விளையாட்டிற்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசியரீதியில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும், பாடசாலைகளிலிருந்து 15 வயதுக்குட்பட்டோருக்கான விளையாட்டணி தெரிவு செய்யப்படவுள்ளது.

இதற்காக யாழ். மத்திய கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பயிற்சிப் பாசறை நடைபெறும்.

இச்சங்கத்தில் அங்கம்வகிக்கும் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 4 மாணவர்கள் வீதம் பொறுப்பாசிரியரின் துணையுடனும், பயிற்சிக்கான உபகரணங்களுடனும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [ஸ்ரீ]

## இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து, பருத்தித் துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வசித்து வரும் குடும்பங்களுக்கான நவம்பர் மாத உலர் உணவு பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்தினால்விநியோகம்செய்யப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்கள் எதிர் வரும் 9ம் திகதி வியாழக்கிழமையும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்கள் எதிர் வரும் 11ம், 12ம் திகதிகளிலும், பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்திக்குஅருகாமையில் அமைந்துள்ள பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக உப அலுவலகத்திற்கு குடும்பத் தலைவர்கள் வந்து உலர் உணவு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்துள்ளார். (செ)

## பஸ் மோதியதில் ஒருவர் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி மொரககே என்னுமிடத்தில் நேற்றுஇடம் பெற்ற வாகன விபத்தொன்றில், ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றவர் காயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ் ஒன்றுடன் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமுற்றவர் மேல திகசிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையிற் பிரதான பகுதிகளில் விபத்துக்கள் அதிகரிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-5)

## தேர்வு விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபை 2001 ஆண்டுக்கான தேர்வு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட தேர்வு நாடிகள் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு 10-ம் திகதி டிசம்பர் மாதம் என அறிவிக்கப்படுகிறது. (க)

## விளையாட்டு விழா

புத்தூர் ஆவரங்கால்கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலைய, லிங்கன் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி. ப 1.00 மணிக்கு மேற்படிபாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் கி. இராசையா தலைமையில் நடைபெறும் இந் நிழ்விற்கு கோப்பாய் பிரதேசசெயலர், சு. கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார். (செ)

## பிரதி அமைச்சர்களாக' நியமிக்கப்பட்டோர்

(கொழும்பு)

பிரதிஅமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு.

டீன்மாத்தையா லியனகே தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி விஜயமுனி சொய்ஷா மகாவலி அபிவிருத்தி, எம். என் அப்துல் மஜீத் தபால் தொலைத்தொடர்பு, வி. பி. ஏகநாயக்கா கலாசாரம், டீ. எம். தஸநாயக்கா விவசாயம், நீல் ரூபசிங்கா தொழில், எதிர்வீர வீரவர்த்தனா கிழக்குப்பகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி, குமாரவில்கம போக்குவரத்து, மேர்வின்டீ சில்வா சமூகசேவைகள், மீனவர் சமூக வீடமைப்பு, நந்தசேன ஹேரத் உணவு, சந்தை அபிவிருத்தி, பண்டு பண்டாரநாயக்கா வனவளம் சுற்றாடல், ஏ ஏ. எல் மரிக்கார், (கல்வி) எம். வி எம். அப்துல்காதர் கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி, பிரியங்கா ஜெயரத்தின இளைஞர் விவகாரம், சோமசுந்தரம் கணேசமூர்த்தி இனவிவகாரம் தேசியஒருங்கிணைப்பு கியுட தயாரத்தின கல்வி, சந்தன காரியாராய்ச்சி நகர அபிவிருத்திநிர்மாணம்பொது வசதிகள், மகிந்த நந்த அலுக்கமுகே நெடுஞ்சாலைகள். என். மன்சூர் இனவிவகாரம் தேசிய ஒருங்கிணைப்பு,

சரத் கீப்ரத்ன விவசாயம். சந்திரஸ்ரீ கஜதீர தொழில் பயிற்சி, பியசேன கமகே அரசியல் விவகார கைத்தொழில் அபிவிருத்தி, முனிதாஸ பிறேமச்சந்திர நெடுஞ்சாலைகள், ஜன பண்டார தென்னக்கோன் சுகாதாரம், சாந்த பிறேமரத்தின நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவம், பிறேமரத்தின சுமதிபால வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனர்நிர்மாண, வடகிழக்கு தமிழர் விவகாரம்,

பத்மஸ்ரீ கூரியபலசம் பெருந்தோட்ட தொழிற்துறை, ஜெகத் பாலசூரிய நகர அபிவிருத்திநிர்மாணம் பொதுவசதிகள், சமல் ராஜபக்ஸ துறைமுக அபிவிருத்தி மற்றும் தென்பகுதி அபிவிருத்தி, சுரேந்திர கொரியா வெளிவிவகாரம், ஜீலத் அழகப்பெருமாள் சமுர்த்தி, கிராம அபிவிருத்தி, பாராளுமன்ற அலுவல்கள், மலைநாட்டு அபிவிருத்தி, லயனல் குணவர்த்தன சுகாதாரம், ஜீரிஸ் பெரேரா மின்சக்தி எரிபொருள், எதிர்வீர பிறேமரத்தின புத்ததாஸ மதவிவகாரம், ஜயதிஸ்ஸ ரணதீர காலி அபிவிருத்தி, சிறுவிளைவுப் பொருள் ஏற்றுமதி. (க-2)

# புலிகள் ஆலோசகர் - வை. கோ சந்திப்புப் பற்றி எதுவுமே தெரியாது

(சென்னை)

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழக செயலர் வை கோபாலசாமிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை பற்றி தனக்கு எதுவுமே தெரியாதென்று பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் பங்காரு லட்சுமணன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

வை கோபாலசாமி பிரதமர் வாஜ்பாயிடம் அனுமதி பெற்றிருந்ததெதுவும் தனக்குத் தெரியாதென்றும் ஆனால் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ம. தி. மு. க அரசின் கொள்கைகளுக்கு மாறாக நடக்கமாட்டா தென்றும் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிடுகையில்; கூட்டணியில் இருக்கும் கட்சிகள் விடுதலைப்புலிகள் பற்றி தனித்தனிக்கருத்துகள் வைத்திருக்கலாம் ஆனால் மத்திய அரசு என்ற நிலையில் ஒரு மைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(து-க)

# தமிழனின் தனித்துவத்தை உலக அரங்கில் நிறுத்திய தலைவர் பிரபாகரன்

## தமிழ்ச்சங்கப் பேரவைத் தலைவர் தெரிவிப்பு

(புதுடில்லி)

தந்தை பெரியார் தமிழன் என்ற இனத்தை உலகிற்கு இனம் காட்டியவர் என்றால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் தமிழரின் தனித்துவத்தையும், மானத்தையும், மறத்தையும் உலக அரங்கில் நிலைநிறுத்தியவர்.

அந்தவகையில் பெரியார், தமிழின் முகம் என்றால், பிரபாகரன் தமிழர்களின் முகவரி. இவ்வாறு நெல்லையில் நடைபெற்றதமிழக திருவிழாவில் தலைமையுரையாற்றிய தமிழ்ச் சங்கப்பேரவைத் தலைவர் நா.அருணாசலம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழக விழா நடைபெறுவதற்கு பிரபாகரன் நிதியுதவி புரிந்திருப்பதாக இங்கு கண்டனக்குரல்கள் எழுந்துள்ளன.

தமிழீழ போராட்டக்களத்தில் நிற்கும் பிரபாகரனால் எவ்வாறு இவ் விழாவுக்கு நிதியுதவி வழங்க முடியும்?

நாம்தான் அவருக்கு நிதியுதவி செய்யவேண்டியவர்களாய் உள்ளோம் என்று குறிப்பிட்டார்.

மேடைகளில் தமிழ், தமிழீழம், பிரபாகரன் என்றெல்லாம் உரக்கப் பேசும் நாம், தமிழர்களுக்கும், தமிழீழத்திற்கும் ஏதாவது உதவிகள் புரிந்திருக்கிறோமா என்றும் அவர் கூட்டத்தாரிடையே வினாத்தொடுத்தார்.

(உ)

# அமெரிக்க அதிபருடன் பேச்சு நடத்த முயற்சி

(ரெல்அவிவ்)

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்களை முடிவிற்குக் கொண்டுவரும் வகையில் இருநாட்டுத் தலைவர்களும் அமெரிக்க அதிபர் பில்கிளின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்துள்ளதாக ரெல்அவிவ் செய்திகள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இருநாட்டுத் தலைவர்களுக்கும்அமெரிக்கஜனாதிபதி கிளின்டன் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இப்புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது பலஸ்தீனத் தலைவர் ஜாசீர் அரபாத்தும், இஸ்ரேல் பிரதமர் எஹிட் பராக்கும் சந்திக்கும்இப்பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை அமுல் செய்வது, சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதுஆகியவிடயங்களில் இரண்டு தலைவர்களிற்கும்இணக்கநிலைஏற்படலாமென அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(வி)

உலக தரிசனம்

# ஐப்பானியர் பயணம் செய்த பஸ் துப்பாக்கிதாரியால் கடத்தல்

(கிரிஸ்)

ஜப்பானிய பயணிகள் பிரயாணம் செய்த பஸ்ஒன்று துப்பாக்கிதாரியால் கடத்தப்பட்டசம்பவம் கிரேக்கத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கிறிஸ்கோ கிறிஸ்கியா என்றழைக்கப்படும் கடத்தல்காரர் தொலைபேசி மூலம் தொலைக்காட்சி நிலையத்திற்கு செய்தி தெரிவிக்கையில் தன்னை யாரும் பின் தொடர்ந்து காரில் வரவேண்டாமெனவும் காவல்துறையினரோ அல்லது வேறுஎவருமே தன்னைப்பின் தொடரவேண்டாமெனவும் அப்படித் தொடர்ந்தால் பயணிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சுட்டுக் கொன்றுவிட்டு பஸ்ஸிற்கும் தீமூட்டப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(து)

# யூகோ ஐ. நா. வில் அங்கம்

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையில் யூகோஸ்லாவிய நாடு அங்கத்துவம் பெறவுள்ளது.

இதற்குரிய அங்கீகாரத்தை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை வழங்கியுள்ளது. (உ)

# இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனம் மீது தாக்கு

(வாஷிங்டன்)

சர்வதேச சட்டங்களை அவமதிக்கும் விதத்தில், இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனப் பிரதேசங்கள்மீது தாக்குதல் நடத்தி வருவதாக அமெரிக்க மனித உரிமை அமைப்பு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 5 வாரங்களாக இஸ்ரேலிய இராணுவத்தினர் பலஸ்தீனப் பகுதிகளில் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் 170க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவத்தின் நடவடிக்கைகள் கவலை தருவதாக உள்ளதெனவும் அமெரிக்க மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

(உ)

# இன்ரநெற் மூலம் வாக்களிப்பு

(வாஷிங்டன்)

விரைவில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் அமெரிக்க இராணுவத்தினர் 200 பேர் இன்ரநெற்மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

அமெரிக்க தேர்தல் வரலாற்றில் இன்ரநெற் மூலம் வாக்களிப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குச்சாவடிகளில் இருந்து வெகுதூரத்தில் மற்றும்வெளிநாடுகளில் இருக்கும் இராணுவத்தினருக்கே இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாய் அறிய முடிகிறது.

(உ)

# காஷ்மீரில் நிலக் கண்ணிவெடி பிரமுகர் உட்பட அறுவர் பலி

(புதுடில்லி)

இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்டகாஷ்மீர் பகுதியில், நிலக்கண்ணி வெடித்ததில் மூத்த காங்கிரஸ்கட்சித்தலைவர் ஆகாஷையத்முகைதீன் உட்பட 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஷியா முஸ்லிம் சமுதாயத்தின் முக்கிய புள்ளியாய் விளங்கிய ஆகாஷையாத் முகைதீன் படுகொலை செய்யப்பட்டமைக்கு, இந்திய அரசு சார்பான அவரதுகொள்கைகளே காரணம் என கருதப்படுகிறது.

இதேவேளை.

கடந்த பல வருடங்களாக காஷ்மீரில்நிலவும் வன்முறைச் சம்பவங்களில் கொல்லப்பட்ட முதலாவது ஷியா முஸ்லிம் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# மாவோ கிளர்ச்சித் தலைவர் செய்தியாளர் முன் பிரசன்னம்

(பூட்டான்)

நேபாளத்தில் கைது செய்யப்பட்ட மாவோ கிளர்ச்சித் தலைவர் ஒருவர் செய்தியாளர் கூட்டத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

நேபாள இராணுவத்தினரால் அண்மையில் தினேஷ் சர்மா என்ற மேற்படி கிளர்ச்சித் தலைவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட தமது தலைவர் எங்கிருக்கிறார்என்பதைஅரசு வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் நாட்டில் பரவலாகவன்முறைகள் வெடிக்கும் எனக் கிளர்ச்சிக் குழுவினர் காலக்கெடு விதித்திருந்தனர்.

காலக்கெடு முடிவடைவதற்குசில நிமிடங்கள் முன்பு கிளர்ச்சித்தலைவர்பத்திரிகையாளர் முன்பு கொண்டுவரப்பட்டார்.

இதேசமயம், செய்தியாளர் முன் உரையாற்றிய மேற்படி கிளர்ச்சிக் குழுத் தலைவர், தான் வன்முறையைக் கைவிட்டு விட்டதாகவும், விரைவில் விடுதலை செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

# விமான விபத்து

(பீக்கிங்)

சிட்னி விமான நிலையத்தில் 190 பயணிகளுடன் வந்த சீன எயர் பஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஓடுபாதையை விட்டு விலகிப் புற்றரையில் தரையிறங்கியது.

எனினும் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. குறித்த விமானத்திற்கும் ஏதொரு சேதமும் ஏற்படவில்லை என்பதை விமான நிலையப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர். (உ)

# இந்துமாகடல் தீவுகளிலிருந்து பொதுமக்களை வெளியேற்றியமை சட்டபூர்வமற்றது என தீர்ப்பளிப்பு

கடந்த 30 ஆண்டுகளிற்கு முன்பு, இந்துமாகடலின் சில தீவுகளில் இருந்து பொதுமக்களை பிரிட்டன்வெளியேற்றியமை சட்ட விரோதமானதெனஇலண்டன்உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இராணுவத் தளம் அமைக்கும் நோக்கில் சாங்கோ உட்பட பல்வேறு தீவுகளில் இருந்து பிரிட்டனால் வெளியேற்றப்பட்ட மேற்படி பகுதிமக்கள், தற்போது இரண்டாயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மொறீசியஸ்தீவில் வசித்து வருகின்றனர்.

இலண்டன் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இடம்பெயர்ந்து வாழும்மக்கள் நல்லாதரவு வழங்கியிருப்பதுடன், தாம் மீண்டும் சொந்த நிலங்களில் வாழ வழிவகைகள் செய்யப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ)

# இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட எச்.ஐ.வி நோயாளிகள் சீனாவில்

(பீக்கிங்)

சீனாவில் இருபதாயிரத்து 700 எச்.ஐ.வி. நோய்க்காவிகள் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

20 தொடக்கம் 29 வயதிற்குட்பட்டவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடு முழுவதிலும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட எச்.ஐ வி நோய்க்காவிகள் காணப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டில் 10 மில்லியன் பேர் எச். ஐ. வி. நோய்த்தொற்றுக்குஆளாகலாம் என ஐக்கிய நாடுகள்சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எச். ஐ. வி. வைரசைப் பரப்புவோரை இனம் கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் கட்டுக்கடங்காமல் இந்நோயின் தாக்கம் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# தென்கிழக்கு ஆசியாவில் அதிகரிக்கும் எயிட்ஸ்

(லண்டன்)

நரம்பில் ஊசி மூலம் போதை மருந்து ஏற்றிக் கொள்ளும் பழக்கம் அதிகமாக இருப்பதால் எயிட்ஸ் நோய் பரவல் தென் கிழக்கு ஆசியாவில் அதிகரிப்பதாக உலக வங்கியின் புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

தாய்லாந்து நாட்டின் பாங்கொக் நகரை இதற்கு உதாரணமாக அவ் ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்கிழக்கி ஆசிய நாடுகளில்10ஆண்டுகளுக்கு முன்பு போதைபோடுபவர்களில் 2வீதமானோர் எச். ஐ. வி. தொற்றுக்கு ஆளாகியவர்களாக இருந்தனர்.

தற்போது இது 40 வீதமாக அதிகரித்துள்ளது

இவ்வாறு ஊசி போட்டுக் கொள்பவர்கள் பர்மா மலேசியா வியட்நாம் காடுகளிலும் அதிகரித்து வருவதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

மனநலம் நன்கு உடையரா யினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப் புடைத்து.
- குறள்

# வலம்புரி

## வடம்பிடிக்க வாருங்கள்!

இனப்பிரச்சினை விடயத்தில் பின்வரும் நிகழ்வுகள் கடந்த ஐந்து தினங்களுக்குள் நடந்தேறியுள்ளன.

★ பிரபாகரன் - எரிக் சோல் சந்திப்பு.

★ எரிக்சோல்-ஜனாதிபதி சந்திப்பு.

★ ஜனாதிபதி- வாஜ்பாய் தொலைபேசி மூலம் உரையாடல்

★ தமிழ்மக்கள்படும் துன்பங்களுக்கு எமது காலத்திலேயே முடிவு கட்டவேண்டும். அதற்குரியகாலம் தெரிகிறது சு. ப. தமிழ்ச்செல்வன்

இனப்பிரச்சினையில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய இந்நிகழ்வுகளில் மக்கள் ஓரளவு திருப்தி கொண்டுள்ளனர். இவை ஒருபக்கத்தில் நிகழ தென்னிலங்கையில் சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் உள்நாட்டுப் பிரச்சினையில் நோர்வே தலையிடக் கூடாதென்றும், யுத்தத்தின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் கோஷமெழுப்பியுள்ளனர், எனினும் அரசு - புலிகள் - நோர்வே ஆகிய முத்தரப்பினரும் மனவுறுதியுடன் சமாதானத்தை நோக்கி நகர்ந்தால் இவ்வெதிர்ப்புக் கோசங்கள் எல்லாம் பயனற்றதாகி விடும். ஏனெனில் பெரும்பாலான சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முன் சிஹல உறுமயவின் சீற்றமோ, ஜே.வி. பியின் இனவாதமோ எடுபடப்போவதில்லை என்பது உறுதி. இதுவிடயங்களில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான ஒற்றுமையும் - ஒருமித்த குரலும் சமாதானத்தின் விடியலுக்குத் தேவை.

எனினும் தமிழ் அரசியல் கட்சிகள் மௌனத்தையே கடைப்பிடிக்கின்றன. தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளை வழங்க முனைந்தால்கூட பேரினவாத அமைப்புகள் தமக்குள் இருக்கும் குத்துவெட்டுகளை மறந்து ஒன்று சேர்ந்துவிடுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் பார்த்திருந்தும் தமிழ்க்கட்சிகள் தமக்குள் முட்டி மோதுகின்றனவே ஒழிய சந்தர்ப்பமறிந்து தமிழ்மக்களின் நிலையறிந்து ஒன்றுசேர மறந்து-மறுத்துவிடுகின்றன.

எனவே யுத்தத்தின் பாறையில்சிக்குண்ட சமாதானத்தேர் தற்போது நகர்வதுபோல்தெரிகிறது. இச்சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும்ஒன்றுசேர்ந்து சமாதானத்தேரின் வடம் பிடித்திழுப்போம்,

# மானுடத்தின் முழுமையைக்காணத்துடிக்கும்

## சமூக எழுச்சிக்கு "படி" இதழ் உரமூட்டும்

யாழ்ப்பாண மண்ணில் தேசிய கல்வியற் கல்லூரி மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் பல புதிய வரலாறுகளை ஆக்கியுள்ளது. பீடாதிபதி அவர்களுடைய வழிகாட்டல் கல்விக் கல்லூரிச் செயற்பாடுகளை சமூக இயக்கத்துடன் ஒன்றிணைத்துச் செல்கின்ற திறமை, எமது பிரதேசத்தில் இயங்கும் ஏனைய அரச- பொது- தனியார் நிறுவனங்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### வழிகாட்டி

இவ்வகையில் உலக ஆசிரிய தினத்தன்று ''படி'' என்ற இதழ் யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரியின் வெளியீடாக வெளிவந்துள்ளது. ஆசிரியர் கல்விக் கென்று யாழ்ப்பாணத்தில் ஒருகாலத்தில் ''விளக்கு'' சஞ்சிகை வெளிவந்தது. தற்போது எதுவுமில்லை. இந்நிலையில் ''படி'' வெளிவருதல் படித்தலுடன் கூடிய படித்தலுக்கு வழிகாட்டி நிற்கின்றது.

''படி'' ஆசிரியர் தலையங்கத்தில் அறிவின்மை, பொய்மை, அநீதிகள்அழிந்து மனித இனத்திற்கு விடுதலை பெறும் பொருட்டு கல்வியின்மேன்மை, தூய்மை,

## திறனாய்வுக் களம்

நேர்மை, நாகரிகம், ஒற்றுமை, சுதந்திரம் என்பன வெற்றியடையவும் மானிடத்தில் முழுமையைக் காணத் துடிக்கும் எமது பண்பாட்டின் செழுமைக்கும் இவ்வெளியீடு உரமூட்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

### முக்கியகட்டுரைகள்

சமூக மாற்றத்தின் மாபெரும் சக்தி ஆசிரியரே என்ற கட்டுரை ஆசிரியர், ஆசிரியர் தினம் அதன் முக்கியத்துவம் பற்றி அழகாக எடுத்துக் கூறுகின்றார். உளநலம் பாதிப்படைதல் தொடர்பான பூக்கோவின் சிந்தனைகளைக் கலாநிதி சபா. ஜெயராசா எடுத்தியம்பியுள்ளார். பேராசிரியர் சண்முகதாஸின் தேவாரங்களில் மொழியாற்றல் என்ற கட்டுரை பரந்த ஆய்வுப் பொருளின் அர்த்தங்களைப் புலப்படுத்துகின்றது. மண்ணின் மைந்தர்களுக்கு மகுடம் என்ற தலைப்பு பலவிதமான உணர்வுகளை வெளிக் காட்டுகிறது.

மேலும் தாயகத்தின்நவீன கல்வியியல் சுபீட்சத்தை நோக்கி என்ற தலைப்பில் பீடாதிபதி அவர்களுடனான நேர்காணல் எமது மண்ணில் கல்வி அபிவிருத்தி பற்றிய பெரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்துக் கல்வியில் அக்கறையுள்ள அனைவரும் இப்பேட்டியை வசிக்க வேண்டும்.

கல்வி உளவியலில் ஞாபகம், பாடசாலைப்பாடவிதானம், கற்பித்தல் பயிற்சியை வெற்றிகரமாக்கும் சிறந்த மேற்பார்வை ஆகிய ஆய்வில் கட்டுரைகள் ஆக்க சிந்தனைகளையும் எடுத்தியம்புகின்றன, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது ''படி'' வெளியீடு யாழ் மண்ணில் ஆசிரியர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்விதழின் இடைவிடாத வெளியீடு எமது பிரதேச கல்விப் பயிர் வளர உரமூட்டுவதாக!

க. நவரத்தினம்
வட்டுக்கோட்டை

# சமூகத்தை வளர்த்தெடுக்கும் நற்பிரஜைகளை

## உருவாக்குதல் நற்பெற்றோரின் கடமையே

பெற்றோர் தம் குழந்தைகளுக்கு இளமையில் கொடுத்த அளவுகடந்த சுதந்திரம் காரணமாக அவர்கள் வளர்ந்த பின்பு கீழ்ப்படிவின்றி, ஒழுக்கமின்றி வாழ்வதால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அடங்கிப் போகும் நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இளமையிலிருந்து கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள்தான் சமுதாயத்தின் சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

இன்று எத்தனையோ மக்களின் ஆவலோடு கூடிய எதிர்பார்ப்புகள் எதிர்மறையாகவும் மாறி விடுகின்றன. அதனால் அளவில்லாத் துன்பங்களும், துயரங்களும் சூழ்ந்து வாழ்க்கை சூனியமாக மாறி கண்ணீரும் கம்பலையுடனும் காலத்தைக் கழிக்கின்றனர். இளமை அளவிலாச் சக்திகளைக்கொண்டது.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்களாகவும். வளமான வாழ்விற்கு நல்ல வழி காட்டிகளாகவும். சமூகத்தை வளர்த்தெடுக்கும் நற்பிரஜைகளாகவும் திகழ்கின்றனர். இத்தகைய கல்விமான்களாலும், அறிஞர்களாலும் சமுதாயமும், நாடுகளும் தீயவர்களிடம் இருந்து காப்பாற்றப்படுகின்றன.

தம் பிள்ளைகளைக் கற்றோராகவும், அறிவாளிகளாகவும், பண்புள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்கும் பொறுப்புப் பெற்றோர்களின் கையிலேயே தங்கியுள்ளது. செல்வம் சகடக்கால் போன்றது. பெரும் செல்வச் செழிப்போடு ஆடம்பர வாழ்வு வாழ்ந்தவர்களும் ஒருகாலத்தில் எல்லாம் இழந்து ஒரு நேரக் கஞ்சிக்கே வழிவகையின்றி வறுமைக் கோட்டுக்குச் சென்று விடுவது உலகறிந்த உண்மை.

செல்வம் நிலையற்றது என்பதை உற்றுணராது பலர் கிடைத்த செல்வத்தைப் பல வழிகளிலும் உதாசீனமாகச் செலவு செய்கின்றனர். இளமையிலிருந்தே தம் குழந்தைகளை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அவர்களின்போக்கிற்கு விட்டு விடுகின்றனர்.

குழந்தைகளைத் தண்டிப்பது தான் தவிர்க்க வேண்டியிருந்தாலும் கண்டிப்பையாவது கையாளக் கூடாதா? நமது எண்ணம் தான் நமது செயலைத் தூண்டுகிறது.

ஆகவே எமதுகட்டுப்பாட்டை வளர்க்கும் எண்ணங்களை நாம் வரவேற்க வேண்டும். எமது வாழ்வுக்கு இன்றியமையாத கண்டிப்புடன்வளர்க்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்த பின், வாழ்க்கையை எளிதாகவும் மதிப்பு மரியாதையுடனும், நன்றி உள்ளவர்களாக. பேச்சில் செயலில் திறமையுள்ளவர்களாகச் சிறந்த மனோபாவம் கொண்டு வாழ்கிறார்கள்.

ஜப்பான், சீனா போன்ற அயல் நாடுகளின் குழந்தைகளை நம்நாட்டுக் குழந்தைகளோடு ஒப்பிடும்போது எம்

அ. தம்பித்துரை
ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர்

குழந்தைகளின் குறைபாடுகளுக்கு நாம் வளர்க்கும் முறைதான் காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. பெற்றோர் தம் குழந்தைகளுக்கு இளமையில் கொடுத்த அளவு கடந்த சுதந்திரம்காரணமாக அவர்கள் வள ந்தபின்பு கீழ்ப்படிவின்றி, ஒழுக்கமின்றி வாழ்வதால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அடங்கிப் போகும் நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். ஐந்தில் வளையாதது ஐப்பதில் வளையுமா? இளமையிலிருந்து கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள் தான் சமுதாயத்தின் சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

தோல்வியைக் கண்டு துவண்டு போகாது, சோர்ந்து விடாது. தளராத உள்ளத்தோடு முயற்சிப்பதால் ஒவ்வொருவரும் தன் குறிக்கோளையும் இலட்சியத்தையும் இலகுவில் அடையமுடிகிறது.

மனம் எதை நம்பி எதிர்பார்க்கின்றதோ, எதைக் குறித்துச்செயற்படுகின்றதோ அதனைச் சாதனையாகப் பெறுகின்றது. இதற்குத் தன்னம்பிக்கை ஆழமாகவேர்விட வேண்டும். எப்படியோ சாதித்தே தீருவேன் என்ற மனோபாவமும் நம்பிக்கையும் ஏற்படுவதே அதிஷ்டத்திற்கு அடிப்படையாகின்றது. இவை தான் எம்மை உயர்ந்த வாழ்விற்கு அழைத்துச் செல்கின்றன.

எமது இலட்சியமும் குறிக்கோளும் நம்மை வந்தடையும் வரை அதற்காக அயராது எத்தனை திட்டங்களையும் யுக்திகளையும் தந்திரங்களையும் கையாளமுடியுமோ அவற்றையெல்லாம் கையாண்டு அரும்பாடுபட்டு உழைக்க வேண்டும்.

எம் உழைப்புக்கேற்ப ஊதியம் கிடைத்துவிடின் அதை விடப்பேறும் மனநிறைவும் வேறு இருக்க முடியாது எந்த ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் அந்த நாட்டின் இளைஞர்களே பொறுப்பாக உள்ளனர். இளைஞர்கள் மனம்போன வழி செல்லாது அதற்கெல்லாம் விதிவிலக்காக கட்டுப்பாடு என்பது ஓர் ஆக்கசக்தி என்பதை உணர்ந்து மன உறுதியோடு செயற்படத் தம்மைத் தாம் தயார்படுத்திக் கொள்வது ஒவ்வொருவரினதும் தலையாய கடனாகும்.

அந்தப்பருவத்தில் எடுக்கும் முயற்சியாலும், ஊக்கத்தாலும், கடின உழைப்பாலும் எதிர்காலத்தில் எத்தனை பட்டங்களையும். பதவிகளையும் வெற்றிகள் விருதுகளை அடையமுடிகின்றது. என்பதை உணர்ந்து கல்வியை வளர்த்தெடுக்க அயராது பாடுபட வேண்டும்.

கல்வியின் வளர்ச்சியால் செல்வமும் செல்வத்தால் வீரமும்எம்மைவந்தடைகின்றன. பெற்றோர், உற்றார், உறவினர்களின் உதவியோடும் வழிகாட்டலோடும். தலைமைத்துவத்தோடும் தம் எதிர்கால வாழ்க்கையைச் சீராகஅமைக்கவல்லது. கல்வி ஒன்றே என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள் செல்லாது அவன் வாயிற் சொல் என்ற முதுமொழிக்கிணங்க, இல்லையென்றுஇழிவாகக்கூறாது உண்டு என்ற நிறைவான நிலைக்கு எம்மை உருவாக்கும் பொறுப்பு எமது கையிலேயெ இருக்கின்றது என்பதை உணர்ந்து அனைவரும் அதற்காக உழைக்க வேண்டும்.

கற்று முன்னேறும் காலத்தை வீணாகக் கழித்து விட்டுப் பின்பு ஒருவேளை கவலைப்படுவதால் எவ்வித பயனுமில்லை. தம்முடைய வாழ்வின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் தமக்குத் தாமே பொறுப்பு என்பதை உணரத் தவறுவதாலேயே இன்றைய மாணவரின் கல்வி பின்னடைவதற்குக் காரணமாகிறது. பல கிளைகளோடும் பரந்து வளர்ந்து பருத்து நிற்பதற்கு ஓர் ஆல மரத்தின் விழுதுகள் துணை புரிவது போல் தம்பிள்ளைகளும் தமது தள்ளாத வயதில் தளர்ந்த காலத்தில்தணியாத குளிர்ந்த நிழலைத்தந்து தம் வாழ்க்கை வசந்தமாக மாற உதவுவார்கள் என்ற கனவோடும். கற்பனையோடும் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியூட்டி வளர்த்து விடுகிறார்கள்.

தம் பெற்றோரைக் கண்கண்டதெய்வங்களாகமதித்து. அவர்களுக்கு ஊன்றுகோலாக நின்று உதவி அவர்களின் நிறைவான வளமான செழிப்பான வாழ்வைக் காணத்துடிக்கும் நன்றியும் நல்லறவுமுள்ள பிள்ளைகளைக் காணும்போது உள்ளத்தில் உவகை உண்டாகிறது.

தமது எதிர்கால வாழ்வை வளமுடன் மிக்க ஏற்றவழி அமைக்கத் தவறுவோர் மற்றவர்களின் செழிப்பான வாழ்வைக் கண்டு பொறாமைப்படுவதிலோமனம்நோவதிலோ பயனில்லை. ஒவ்வொருவரும் தான் எங்கே இருக்கின்றேன்? மேலும் முன்னேற யாது செய்ய வேண்டும்? என்பதைப் புரிந்து கொண்டு இறுக்கமான தன்னம்பிக்கை தெளிவான இலட்சியம். சளைக்காத மன உறுதி, உருப்படியான செயல் இவற்றைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் புகுத்திக் கொள்வதால் தமது

(2ஆம் பக்கம் பார்க்க)

# இனவாத பௌத்த பிக்குகளே சமாதானத்தை எதிர்க்கிறார்கள்!

## வவுனியா விகாராதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பல வருடங்களின் வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக நிபந்தனையின்றிப் பேச முன்வந்திருப்பது சமாதானத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு வவுனியா சாமவிகாராதிபதி சியம்பலாகஸ்தவ விமலசார தேரர் குறிப்பிட்டார்.

நோர்வே தூதுக்குழுவினர் வன்னி சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியமை தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இனவாத சக்திகளும், இனவாதக் கருத்துமிக்க பிக்குகளும் சமாதானத்தில் விருப்பமின்றிக் காணப்படுகிறார்கள்.

ஆனால் யுத்தச் சூழலில் வசிக்கும் டக்குமாரும் பொது மக்களும் யுத்தத்தின் கொடூரத்தை உணர்ந்து சமாதானத்திற்காக தவம் இருக்கிறார்கள்.

இந்த அரிய சந்தர்ப்பத்தினை விடுதலைப் புலிகளும், அரசும் சாதமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (உ)

# இளம் பெண்கள் பாலியல்வல்லுறவு பாதாளஉலககோஷ்டியின் தலைவர் நவாஷ் கைது

(கொழும்பு)

வத்தளைப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்த இரு இளம் பெண்களைக் கடத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியது தொடர்பாக கடந்த வாரம் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் பாதாள உலகக் கோஸ்டியின் தலைவர் நவாஷ் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரை விடுதலை செய்யுமாறு அரசியல் வாதிகளிடமிருந்து அழுத்தம் கொடுக்கப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இவர்கள் மீதான வழக்கை வாபஸ் பெறுமாறு சம்பந்தபட்டவர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ந)

# காணாமல் போன படையினரின் பெற்றோர்கள் பாப்பரசருக்குக் கடிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தடுப்புக்காவலிலிருப்பதாக நம்பப்படும் சுமார் 3,000 படையினரை பார்வையிடுவதற்கு தமக்கு அனுமதி பெற்றுத் தருமாறு காணமல்போன படையினரின் பெற்றோர், உறவினர் சங்கம் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரிடம் உதவி கோரி கடிதம் ஒன்றைஅனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது விடுதலைப் புலிகளின் வசமுள்ள எங்கள் பிள்ளைகளைப் பார்வையிடுவதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற மனித நேயஅமைப்புக்கள் மூலம் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிந்த போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இலங்கை அரசின் அனுமதியைப்பெற்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு செல்வதற்கு நாங்கள் மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில், புலிகள் இயக்கத்துடன் பல காலம் தொடர்புகொள்ள முடியாதுள்ளது.

இந்நிலையில் எமதுபிள்ளைகளைப்பார்வையிடுவதற்கு அரசிடம் அனுமதிபெற்றுத் தருமாறு அக்கடிதத்தில் பாப்பரசரிடம் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சங்கத் தலைவர்களுடான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

கந்தர்மடத்தில் உள்ள ஐ.தே.கட்சிஎம்.பிதி.மகேஸ்வரனின் கரியாலயத்தில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது;

# இலங்கையில் மீண்டும் சமாதானம் ஏற்படும்?

விடுதலைப்புலிகள் அமைப்பின்தலைவர் வே பிரபாகரனுடன் நோர்வேயின்விஷேட தூதுவர் எரிக்சோல்ஹைம் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை இலங்கையில் மீண்டும் சமாதானத்துக்கான நல்லெண்ணச்சூழல் ஏற்படுமென்ற நம்பிக்கையை தந்துள்ளது.

இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிறஸ் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தையில் நோர்வேஅரசாங்கம் ஈடுபடுவதற்கு இலங்கைஅரசு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து விழிப்புடன்இருப்பது சரியானது என்றும் சமாதான நடவடிக்கைகளை செயற்படுத்துவதிலிருந்துஜனாதிபதி விலகி அதற்கான வாய்ப்பை இழக்கவும் முடியாது என்றும் அப்பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய சமாதான முயற்சி பூரண வெற்றியளிக்க ஜனாதிபதிக்கு தற்துணிவும், அரசியல் ஆதரவும், நண்பர்களின் உதவியும் மிகவும் அவசியமானது எனவும் அவ்வாசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-2)

# அரச ஊழியர்களின் பதவி உயர்வில் புதிய திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

அரச பதவியொன்றுக்கு வெற்றிடமேற்படும்வரை அப்பதவிக்குத் தகுதிபெற்றுள்ள ஒருவர் பதவியுயர்வுக்காக காத்திருக்கத் தேவையில்லையென பொதுநிர்வாக அமைச்சர் ரிச்சட்பத்திரன அறிவித்துள்ளார்

அரசஊழியர்ஒருவர்குறித்த பதவிக்கான தகுதியை எத்திதியில் பெற்றிருந்தாரோ அத்திகதியிலிருந்து அவர் பதவியுயர்த்தப் பட்டவராக கருதப்படுவர்.

இப்புதிய திட்டத்தின்மூலம் அரச ஊழியரொருவர் குறித்தவொரு தரத்தை என்று பெற்றுக்கொள்கிறாரோ அன்றைய திகதியிலிருந்து அதற்கான சம்பளயுயர்வும் அவருக்கு வழங்கப்படும்.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை பொதுநிர்வாக அமைச்சு அனுப்பிவைக்கவுள்ளது. (ந)

## டிசம்பர் மாத ..

இதேவேளை நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹைம்மின் பேச்சுவார்த்தை குறித்து ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில தொடர்புகொண்டு விளக்கியிருந்தமை தெரிந்ததே. (ந)

## 11 சடலங்கள்

களை இதுவரை அடையாளம் காண முடியாத காரணத்தால் அரச செலவில் அடக்கம் செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரியுள்ளதாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் ஜபந்த நவரட்ண தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## பயணிகள்

டன நாளை காலை 7மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறும் யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் மேலும் கேட்டுள்ளது. (ஸ்ரீ)

## லண்டன்

இலண்டனில் 'ஹோங்புரு'' என்ற இடத்தில்இடம் பெற்றகலைவிழாவின்போதே இம்மோதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது இம்மோதல் சம்பவத்தின்போது துப்பாக்கிகள், கத்திகள் பாவிக்கப்பட்டதாகவும், இதுதொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ)

## அரசியல்...

அமைப்பு சீர்திருத்த யோசனைகள் அடங்கிய ஆவணங்களை அவரிடம் கொடுத்துவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பான கருத்துக்களையும் புலிகள் தரப்பில் இருந்து அறியவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை பொதுஜனஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி எம். ஜெயரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதே சமயம், அரசியல்சீர்திருத்த மசோதாவினை புலிகளுக்கு அனுப்ப ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான வழிமுறைகள் சாத்தியப்படாமையால் அது ஒத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (உ)

## வெள்ளை...

வானில் வந்த ஆயுதக்குழுக்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வெள்ளைவானில் வந்த இந்த ஆயுதக்குழுவினர் நன்கு தமிழ்பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடும் மோதல் நடைபெற்றுவரும் நாகர்கோவில் பகுதிக்கு அருகே அம்பன்உள்ளது குறிப்பிடத்தக்கது. (ம)

# சமாதான முயற்சியை வரவேற்று பொது அமைப்புகள் தீர்மானம்

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும்ஏற்படுத்த பாடுபடும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் பாராட்டிக் கடிதமொன்றை அனுப்புவதென யாழ். மாவட்டப் பொது அமைப்புக்கள் ஒரு மனதாக முடிவு செய்துள்ளன.

யாழ். மாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்மான அமைப்பின் தலைவர் வணக்கத்துக்குரிய பேணாட் அடிகள் தலைமையில் இக் கூட்டம் நேற்றுக் காலை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெற்றது.

தற்போது தோன்றியுள்ள சமாதான நிலையை மக்களுக்கு பயனுடையதாகமாற்றிக் கொள்ள இருதரப்பும் பாடுபட வேண்டும் எனவும், அத்தகைய சமாதான சூழ்நிலையை உருவாக்கிய இருவரையும், நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளையும் வாழ்த்துவது சாலப் பொருத்தமானதும் எனவும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இக்கடிதங்களின் பிரதிகள் ஐ. நா. மன்ற பொதுச்செயலர் கோபி அனான், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் நோர்வே அரச பிரதிநிதிகளுக்கும் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 2 கரும்புலிகள்---

யாழ்ப்பாணம்)

மேஜர் சுடர்மணி [சிவராசா சிறீதரன் யாழ்ப்பாணம்] [ம]

## முதலாவது

ளன.

அன்றய தினம் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பது தொடார்பானவிவாதமும் இடம் பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (ஸ்ரீ)

## கொழும்பு

திப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு பிராந்தியம், நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இருபத்தினான்கு மணி நேரமும் ஆங்காங்கே திடீர் சுற்றிவளைப்புகளை நடாத்தி, சந்தேக நபர்களைக் கைது செய்வதுடன் அருகிலிருப்பவர்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

இதற்காக சுமார் 500ற்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு விஷேட பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன், எந்நேரமும் திடீர்த்தாக்குதலை எதிர்கொள்ளக்கூடிய நவீன ஆயுதங்களும் வழகப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தரர்.

இதேவேளை கொழும்பு நகருக்குள் தற்கொலைத் தாக்குதலை நடாத்துவதற்கு அதிகளவிலான தற்கொலைக் குண்டுதாரிகள்ஊடுருவியிருப்பதாக செய்திகள் வெளியானது தெரிந்ததே, (ந. ஸ்ரீ)

## பிரபாகரன்---

மிற்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பக அமைச்சர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹைய்மிற்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை பற்றி அமைச்சர்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்கள், விளக்கமின்மை, மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவருவதால் அவற்றைப்போக்கு முகமாகவேஇவ் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுகிறது.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப் படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## புலிகளுக்கு---

வடிக்கைகளினால் புலிகளின் பலம் அழிக்கப்பட்டு இராணுவத்தினரின் கை மேலோங்கியுள்ளது. இவ் இராணுவ வெற்றிக்கு இவ்வருட முற்பகுதியில் வாங்கிய ஆயுதங்கள் பெரிதும் உதவியுள்ளது, என்று தெரிவித்த இராணுவ தளபதி பலகல்ல விடுதலைப் புலிகளை யுத்தத்தில் தோற்கடிப்பதன் மூலமே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என்றும் தெரிவித்தார்.

பொறுப்புள்ள அமைதியை விரும்பும் இலங்கை மக்கள் இராணுவத்துக்கு இளைஞர் யுவதிகள் சேருவதை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அதனையே தான் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் வலுவடைந்துவரும் இவ்வேளையில், சமாதானச் சூழலுக்கு முற்றிலும் வேறுபட்ட முறையில் இராணுவத் தளபதியின் பேட்டி அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ந-2)

## குடாநாட்டுத்...

நோர்வேயின் சமாதான முயற்சி படையினர் மத்தியில் யுத்த ஆர்வத்தை பறித்துள்ளதுடன், உளவியல் ரீதியாக தாக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக யுத்த முனையில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் இராணுவத்தலைமைப் பீடத்தின் கவனத்திற்கு எடுத்துக் கூறியதைஅடுத்தேதலைமைப் பீடம் இவ்வாறு அறிவித்துள் யுத்த முனையில்உள்ளது படையினரின்மனேநிலை மன உறுதி என்பன நோர்வேயின் சமாதான முயற்சியினால் பெர்தும்பாதிக்கப்பட்டுள்ளது எனஇராணுவ அதிகாரிகள் மத்தியில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் களத்தில் உள்ள படையினரின் மனோநிலையைப் பாதிக்காதவாறும், அவர்களைச்சோர்வடையதவாறும்உரிய நடவடிக்கை இராணுவ தலைமைப் பீடம் எடுத்துவருவதுடன் மேலும் நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்து யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளிலும் அரசு இறங்யுள்ளது.

விடுதலைப் புலிகளிடனான நோர்வேயின் பேச்சுக்களை எந்தளவுக்கு இரகசியமாவைக்க முடியுமோ, அந்தளவுக்கு அந்தளவுக்கு பேச்சுக்களை இரகசியமாக வைப்பதற்கு அரசு எடுத்த முயற்சிகள் பயனளிக்காது போனமையே படையினரின் மனோ நிலை மாற்றத்திற்கு காரணம் என்றும் கூறப்படுகிறது. (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.